[திரு. கோவை தங்கம்] [2010 ஏப்ரல் 30

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் இதுவிஷயமாக, அங்கு சிறுத்தைப் புலிகளாலும், யானைகளாலும் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது என்றும், அங்கே வால்பாறையைச் சுற்றிச் சுற்றி அவை வருவதாகவும் சொன்னேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை மானியத்திலே பேசுகின்றபோது அறிவித்தார்கள். 300 தெரு விளக்குகள் உடனே கொடுத்தீர்களென்றால்தான், சிறுத்தைப் புலிகள், யானைகளால் வரக்கூடிய உயிர் ஆபத்துகள் தடுக்கப்படும் என்று சொன்னேன். அதை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்றுகூட, உடனே ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். ஆகவே, வால்பாறையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் மிகுந்த அக்கறையோடு உதவி செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அவருக்கும் நன்றி கூறி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அங்கே அடிக்கடி வந்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் தெரிவித்து, இந்த நேரத்திலே அவருடைய சிறப்பான பணிகளைப் பாராட்டி, அவருக்கும் நன்றி தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

4. கவன ஈர்ப்பு

வேலூரைச் சுற்றி வட்டச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரைச் சுற்றி வட்டச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2010 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் கோரப்பட்டுள்ள வேலூர் வட்டச் சாலைக்கான (Ring Road) கருத்துருவானது, தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் தயார் செய்யப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டம்–VII (NHDP) Phase VII–இல் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பணியினைத் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதிலே நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டம்–VII, National Highways Development Project, Phase VII-ல் இந்தத் திட்டம் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களுடைய வேலூரில் இப்போது Officers Line என்கிற ஒரே ஒரு மெயின் ரோடுதான் இருக்கிறது. அந்த மெயின் ரோட்டில் இப்போது வடக்கு காவல் நிலையம் அல்லது பழைய பேருந்து நிலையம் போன்ற இடங்களையும், C.M.C. மருத்துவமனை போன்ற இடங்களையும் கடக்க வேண்டுமென்று சொன்னால், சில நேரங்களிலே நிறைய வாகனங்கள் நின்றுகொண்டிருக்கின்ற காரணத்தினாலே அரை மணி நேரமாகிறது ஒரு இடத்தைக் கடப்பதற்கு. ஆகவே, வேலூர் நகருக்குள் வரக்கூடிய இந்த வாகனங்களின் நெரிசலைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், உடனடியாக வட்டச் சாலை

அமைத்தாக வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம். நீங்கள் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கக்கூடிய அந்தத் திட்டத்தில், எப்படி நீங்கள் எவ்வளவு கோடி ரூபாய் திட்டத்திலே அதை அமைப்பதாக இருக்கிறீர்கள்? எவ்வளவு கிலோ மீட்டர் செல்கிறது? குறிப்பாக, பூட்டுத்தாக்கு என்ற இடத்தைத் தாண்டியவுடன் நெடுஞ்சாலையில் ரங்காபுரம் விலக்கிலிருந்து செங்காநத்தம், அதேபோல, பாலமதியில் ஒரு மலை இருக்கிறது. அந்த மலைமீது ஒரு ரோட்டை அமைத்து நீங்கள் பாகாயம் வழியாக traffic jam-ஐத் தவிர்க்க வேண்டும். அதேபோல, நீங்கள் பூட்டுத்தாக்கிலிருந்து காட்பாடி வழியாக வரும் கூட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு ஏற்பாடுகளைச் செய்து, பிறகு இலவம்பாடி வழியாகப் பொற்கோயிலைச் சுற்றி வரக்கூடிய அளவிற்கு ஒரு வட்டச் சாலையை அமைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கின்ற அந்தத் திட்டத்தில் எத்தனை கிலோ மீட்டருக்கு, எப்படி வருகின்றது என்ற விவரத்தை அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாக்கில், மத்திய அரசினுடைய நெடுஞ்சாலைத் துறையிலிருந்து மாநில அரசுக்கு ஒரு கடிதம் வந்தது. மாநகராட்சியாக இருக்கக்கூடிய பகுதிகளில், அதனையொட்டியோ அல்லது நகரத்திற்குள் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை இருக்குமானால், அந்த நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் வட்டச் சாலைகளோ, புறவழிச் சாலைகளோ தேவைப்படுமானால் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி மாநில அரசுக்கு கடிதம் வந்தது. அதன் அடிப்படையில் மாநில அரசு, நான் ஏற்கெனவே அறிக்கையில் குறிப்பிட்டதுபோல, நம்முடைய வேலூர் நகரத்திற்கும் புறவழிச் சாலை தேவை, வட்டச் சாலை தேவை என்று சொல்லி கடிதம் எழுதியது. அதாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, அந்த வேலூர் நகரைச் சுற்றி மூன்று பகுதிகளாக வட்டச் சாலைகள் அமைக்கவேண்டுமென்று சொல்லி பிரித்து, கடலூர்–சித்தூர்

2010 ஏப்ரல் 30] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

சாலையில், அதாவது மாநில நெடுஞ்சாலையில், கல்புதூர் என்ற பகுதியிலிருந்து சேவூர், பூட்டுத்தாக்கு வரை இருக்கக்கூடிய இரு இரயில்வே கடவுகளைக் கடக்க ஒரு மேம்பாலமும், பாலாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலமும் அமைக்கப்பட வேண்டுமென்றும், பூட்டுத்தாக்கிலிருந்து சாத்துமதி வரை, நெல்வாயில் வரை மீண்டும் அந்த மாநில நெடுஞ்சாலையிலே இணையக்கூடிய வகையிலே வட்டச் சாலை பகுதி–2 என்றும், அதேபோல அந்த நெல்வாயிலிலிருந்து மீண்டும் தேசிய நெடுஞ்சாலை 46–ஐக் கடந்து, பாலாற்றைக் கடந்து, மீண்டும் கடலூர்–சித்தூர் சாலையிலே இணையக்கூடிய கல்புதூர் பகுதியிலே இணைக்கக்கூடிய வகையிலே 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தக் கடிதத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இந்தப் புறவழிச் சாலை அமைக்கவேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ 179 கோடி ரூபாய் மதிப்பில் அமைய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டம் என்கின்ற வகையிலே Phase VII–ல் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்றதற்குப் பிறகு இந்த வட்டச் சாலை அமைப்பதற்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்தத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது அது எந்த stage-ல் இருக்கிறது? ஏற்கெனவே அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து, பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிற இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வருமா? ஒரே ஒரு தேசிய நெடுஞ்சாலை, C.M.C. வழியாகப் போவதுதான் தேசிய நெடுஞ்சாலை. மற்ற சாலைகள் எல்லாம் நம்முடைய மாநில நெடுஞ்சாலைகளே. ஆகவே, நீங்கள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு முன்னாலேகூட—நம்முடைய மாநில அரசு நெடுஞ்சாலைத் துறையிலே சில சாலைகளை—இப்போதெல்லாம் இலவம்பாடி பக்கம் கொண்டு போகக்கூடிய ரோடு நம்முடைய

[திரு. சி. ஞானசேகரன்] [2010 ஏப்ரல் 30

மாநில நெடுஞ்சாலையில் வருகிறது. அதேபோல, கடலூர் வழியாகப் போகக்கூடிய சாலை மாநில நெடுஞ்சாலையில் வருகிறது. இவற்றிற்கு இப்போதே நீங்கள் நிதியை ஒதுக்கி, உடனடியாக கூட்ட நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்றால், இந்தத் திட்டம் எப்போது வரும் என்று சரியாகத் தெரியவில்லை. ஆகவே, மத்திய அரசின் ஒப்புதலுக்குக் காத்திருக்கக்கூடிய நிலை ஒரு பக்கம் இருந்தாலும்கூட, மாநில அரசே சில சாலைகளை உடனடியாக எடுத்து, வட்டச் சாலை அமைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்காண்டு காலமாக, என்றைக்கும் இல்லாத அளவிற்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு புறவழிச் சாலைகள் அமைப்பதற்கு அனுமதி தந்து, அதற்கான நில எடுப்புப் பணிகளெல்லாம் விரைவாக நடைபெற்று வருகின்றன. அது இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. நம்முடைய திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரிலேகூட புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தொடங்கப்பட்டுவிட்டது. எனவே, இப்படி இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் ஏறத்தாழ 18 இடங்களில் புறவழிச் சாலைகள் தேவை என்கின்ற பட்டியல் இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தனியார் முதலீட்டுடன் இந்தப் பணிகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றது. ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை–46, நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களே செய்ய முன்வந்த காரணத்தினால், அவர்கள் கேட்டதன் அடிப்படையில் அனுப்பப்பட்டிருக்கிறது. இது ஏறக்குறைய 80 கிலோ மீட்டர் நீளம் வருகிறது. நிதியோ ஏறத்தாழ 150 கோடி ரூபாய் அளவிற்குத் தேவைப்படுகிறது. நிதியாதாரம் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால், மாநில அரசின்மூலம் செய்ய இயலாது என்பதால்தான் மத்திய அரசின்

2010 ஏப்ரல் 30] *[திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]*

உதவியை நாடிக் கொண்டிருக்கிறோம். எனவே, தொடர்ந்து வலியுறுத்தி, விரைவாக இந்தத் திட்டத்தைப் பெற்று, வேலூர் நகரைச் சுற்றி வட்டச் சாலை அமைவதற்கு தொடர்ந்து மாநில அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.